# DEPOSITION OF WITNESS
**(Chapter X X I I I Code of Criminal Procedure)**

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

**IN THE COURT OF DISTRICT MUNSIF -**
**CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUPPUVANAM**

Calender Case :
Miscellaneous : Case No: ST**C** **338**/2023
Preliminary Register :
Sessions :
Deposition of Witness for Prosecution : PW2
Defendant :
Court :

Name : கருப்புசேனாதிபதி
Father's Name : அழகு
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of

---

16.2.2024 ST**C** 338/2023 அ. சா.2 கருப்புசேனாதிபதி ஆஜர்

**முதல் விசாரணை தொடர்ச்சி:**

6. வண்டியை ஓட்டி வந்தவர் மேலவளவைச் சேர்ந்த பழனிச்சாமி ஆவார். ஆஜர் எதிரிதான் அன்றைய தினம் அரசு பேருந்தை ஓட்டி வந்தவர் ஆவார். **(சாட்சி ஆஜர் எதிரியை சரியாக அடையாளம் காட்டினார்.)** போலீஸார் இவ்வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. என்னை போலீஸார் சம்பவம் நடந்து எத்தனை நாட்கள் கழித்து எங்கு வைத்து விசாரித்தார் என்றால் அரசு ராஜாஜி மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். நான் 3 நாள் மயக்கநிலையில் இருந்தேன் என் அப்பாவிடம் விசாரித்தார்கள். என்னை விசாரிக்கவில்லை. இந்த விபத்து சம்மந்தமாக யார் புகார் கொடுத்தார்கள், என்ன புகார் கொடுத்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சாட்சி தற்போது பின்வருமாறு மாற்றி கூறுகிறார். என் அப்பா புகார் கொடுத்தார். எங்கு வைத்து புகார் கொடுத்தார் என்றால் பழையனூர் காவல்நிலையத்தில் வைத்து புகார் கொடுத்தார். எதிரியை எங்கள் ஊர் வழியில் வாகனங்கள் தொடர்ந்து இயக்குவதால் தெரியும் என்றால்

சரிதான். எனக்கு இருசக்கரவாகனத்தை இயக்க ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் இல்லை.

2. சம்பவம் நடந்த இடம் ஒரு வழிபாதை என்றால் சரிதான். அதில் ஒரு பேருந்துதான் சென்றுவர முடியும் என்றால் ஒரு பேருந்தும், ஒரு இரு சக்கரவாகனமும் சென்று வரமுடியும். விபத்து ஏற்பட்டதாக சொல்லப்படும் நான் ஓட்டிய வாகனம் பேருந்தின் எந்த பகுதியில் மோதியது என்று எனது அப்பா புகாரில் குறிப்பிட்டுள்ளாரா என்றால் பேருந்தின் வலது புறம் மோதியதாக புகாரில் குறிப்பிட்டு சொல்லியுள்ளார். நான் சொல்வதுபோல் அ.சா.1 புகாரிலோ, விசாரணையில் பேருந்தின் எந்த பகுதியில் மோதியது என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றாலும், வழக்கிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்த இடம் கோவில் அருகே உள்ள வளைவான பகுதி என்றால் வளைவான பகுதி இல்லை. சற்று தள்ளி நடந்தது.

3. விபத்து நடந்ததாக சொல்லப்படும் முன்னாலும், பின்னாலும் வளைவான பகுதி என்றாலும், வழக்கிற்கு ஆதரவாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து ரோட்டின் வடக்குபக்கம் நடந்ததா, தெற்கு பக்கம் நடந்ததா என்றால் சாலையின் மேற்கு பக்கம் நடந்தது. விபத்து நடந்த சமயம் நான் மது அருந்தியிருந்தேனா என்றால் இல்லை. எனக்கு மது அருந்தும் பழக்கம் இல்லை. விபத்து நடந்த சமயம் நான் மது அருந்தியிருந்தேன் என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

4. என் அப்பா எத்தனை மணிக்கு போன் செய்து வரசொன்னார் என்றால் 3.30 மணிக்கு போன் செய்தார். நான் எத்தனை மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் 4.30 மணிக்கு சென்றேன். நான் வாகனத்தில் செல்லும்பொழுது கைப்பேசியில் பேசிக்கொண்டே சென்றேன் என்றால் இல்லை. நான் கைபேசியில் பேசிக்கொண்டே சென்றேன் என்றாலும், என்னுடை கவனக்குறைவால்தான் வாகனவிபத்து ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. அவரது கவனக்குறைவால்தான் வாகன விபத்து ஏற்பட்டது. விபத்து ஏற்பட்டவுடனே எனக்கு மயக்கம் ஏற்பட்டுவிட்டதா என்றால் இல்லை. 5 நிமிடம் கழித்து மயக்கம் ஏற்பட்டது. நான் மயக்கம் ஆன பின்பு என்னை யார் தூக்கிசென்று, எங்கு தூக்கிசென்றார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 3 நாட்கள் கழித்துதான் எனக்கு ஞாபகம் வந்தது.

5. எனக்கு விபத்து நடந்து முடிந்தபொழுது சத்தம்கேட்டுதான் முத்துராமலிங்கம் என்பவர் வந்து பார்த்தார் என்றால் சரிதான். விபத்து நடந்த இடத்தில் முத்துராமலிங்கம் என்பவர் பேருந்திற்கு பின்புறம் வந்தாரா, எனக்கு பின்புறம் இருந்து வந்தாரா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. விபத்து சம்பவம் நடந்தபொழுது பேருந்து ஓட்டுநரை பார்த்தேன் என்றால் பார்த்தேன். பேருந்து ஓட்டுநரின் பெயர், ஊர் எனக்கு தெரியுமா

என்றால் தெரியும். பேருந்து ஓட்டுநரின் பெயர், ஊரை யாரை கேட்டு தெரிந்துகொண்டேன் என்றால் என் அப்பா சொல்லிதெரியும். நான் சொன்ன மாதிரி சொன்ன விதத்தில் இந்த விபத்து ஏற்படவில்லை என்றாலும், எனக்கு இருசக்கரவாகனத்தை இயக்குவதற்கு ஓட்டுநர் உரிமம் இல்லாத நிலையில் இருசக்கரவாகனத்தை இயக்கதெரியாமல் மதுபோதையில் நானாக சென்று எதிரே வந்தவாகனத்தில் மோதி எனக்கு காயத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல.

6. எதிரியின் கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எதிரியானவர் நான் நிலைதடுமாறி வருவதை அறிந்து வாகனத்தை நிறுத்திய பின்பு நானாக எதிரியின் வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியின் கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எனக்கு காலில் எப்படி காயம்ஏற்பட்டது என்பதை எனது தகப்பனாரின் புகாரிலோ, எங்களது போலீஸார் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளோம். எனக்கு தலையில் ஏற்பட்ட காயம் பேருந்து மோதி ஏற்பட்டது இல்லை என்றாலும், எனது இருசக்கரவாகனத்திலிருந்து நான் கீழே விழுந்ததால் தரையில் தலை அடிபட்டு ஏற்பட்டது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:**

1. நான் எனது முதல் விசாரணையில் போலீஸார் விசாரித்தார் என்று சொல்லிவிட்டு தற்போது போலீஸார் விசாரிக்கவில்லை என்று கூறுகிறேன் என்றால் மயக்கம் தெளிந்தபின்பு என்னை ஒருநாள் போலீஸார் விசாரித்தார்கள்.

**மறு குறுக்கு விசாரணை:**

1. நான் கேள்விகளை புரிந்துகொண்டுதான் பதில் கூறுகிறேன் என்றால் சரிதான். எதிரி தரப்பு வழக்கறிஞரின் கேள்வியை புரிந்துகொள்கிறேன் என்றால் சரிதான். குறுக்குவிசாரணையில் அனைத்து கேள்விகளையும் புரிந்துகொண்டுதான் பதில் சொன்னேன் என்றால் அந்த ஒரு கேள்வி மட்டும் எனக்கு புரியவில்லை. எனக்கு அனைத்து கேள்விகளை புரிந்துகொள்ளமுடியும் என்றாலும், அரசு தரப்பில் மறு விசாரணையில் பொய்யாக சொல்லவிட்டு ஒரு கேள்வி மட்டும் புரியவில்லை என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct.

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter X X I I I Code of Criminal Procedure)**

- - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - - -

**IN THE COURT OF DISTRICT MUNSIF -**
**CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUPPUVANAM**

Calender Case :
Miscellaneous : Case No: STC **338**/2023
Preliminary Register :
Sessions :
Deposition of Witness for Prosecution : PW3
Defendant :
Court :

Name : முத்துலெட்சுமி

Husband's Name : அழகு

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of

---

16.2.2024 ST**C** 338/2023 அ. சா.3 முத்துலெட்சுமி ஆஜர்

**முதல் விசாரணை:**

1. நான் எஸ்.வாகைகுளத்தில் குடியிருந்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். அசா.1 எனது கணவர் ஆவார். அ.சா.2 எனது மகன் ஆவார். பட்டியல் சாட்சிகள் முத்துராமலிங்கம், கிருஷ்ணன் ஆகியோர்களை தெரியும். தேதி நினைவில்லை. கடந்த 2022ம் வருடம் டிசம்பர் மாதம் ஒரு நாள் எனது கணவர் ஆடுமேய்க்கசென்றிருந்தார். மதியம் 3.30 மணியளவில் போன் செய்து எனது கணவர் அவருக்கு மயக்கம் வருவதாக கூறி எனது மகன் கருப்புசேனாதிபதியை வரச்சொன்னார். ஒரு அரை மணிநேரத்திற்குள் எனது மகன் எங்களது இருசக்கரவாகனத்தில் சென்றார். என்ன கம்பெனி வாகனம், பதிவெண் என்று நினைவில்லை.

2. அவரது அப்பாவை அழைத்துவரவேண்டி என் மகள் இருசக்கரவாகனத்தில் கிளம்பி சென்றார். மாலை 4.30 மணியளவில் என் மகனுக்கு விபத்து ஏற்பட்டுவிட்டதாக

என் கணவர் எனக்கு கைப்பேசியில் அழைத்துசொன்னார். நான் விபத்து நடந்த இடமான எங்கள் ஊர் மாரியம்மன் கோவில் அருகே சென்றேன். என் மகன் கால் ஒடிந்து, தலையில் அடிபட்டு மயக்கமாக இருந்தார். உடனே அங்கு வந்து 108 ஆம்புலன்ஸில் என் மகனை தூக்கிக்கொண்டு திருப்புவனம் அரசு மருத்துவமனைக்கு வந்தோம். அங்கிருந்து மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டார்கள். அங்கு என் மகன் சுமார் 3 மாதம் உள்நோயாளியாக மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார்.

3. என் மகன் சென்ற இருசக்கரவாகனத்தில் அரசு நகரபேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாக என் கணவர் என்னிடம் சொன்னார். அது எங்கள் ஊருக்கு வரும் நகரபேருந்து ஆகும். எனக்கு பேருந்தின் பதிவெண் தெரியாது. பேருந்து ஓட்டுநர் எந்த ஊரைச்சேர்ந்தவர் என்று தெரியாது. அவர் பெயர் பழனிச்சாமி என்று சொன்னார்கள். நான் ஓட்டுநரை விபத்து நடந்த அன்று பார்ததேன். அவர் ஆஜர் எதிரிதான். **(சாட்சி எதிரியை சரியாக அடையாளம் காட்டினார்)** போலீஸார் என்னிடம் இவ்வழக்கு சம்மந்தமாக விபத்துக்கு மறுநாள் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. போலீஸார் சம்பவம் நடந்து எத்தனை நாட்கள் கழித்து என்னிடம் விசாரித்தார்கள் என்றால் விபத்து நடந்த மறுநாள் மதுரை அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். என்னை எங்கள் ஊரில் வைத்து போலீஸார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கு விபத்தில் காயம்அடைந்தவர் என் மகன் என்றால் சரிதான். இவ்விபத்து நடக்கும்பொழுது நான் எங்கிருந்தேன் என்றால் நான் என் வீட்டில் இருந்தேன். நான் விபத்து நடக்கும்பொழுது வீட்டில் இருந்ததால் எனக்கு விபத்து எப்படி நடந்தது என்றும், யாருடைய கவனக்குறைவால் நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

2. எனது மகனுக்கு இருசக்கரவாகனம் இயக்க ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் இல்லை. என் மகனுக்கு மது அருந்தும் பழக்கம் உள்ளதா என்றால் இல்லை. விபத்து நடந்து 15 நிமிடத்தில் நான் சம்பவ இடத்திற்கு சென்றுவிட்டேன் என்றால் 30 நிமிடத்தில் சென்றேன். நான் செல்வதற்குள் 108 அவசர ஊர்தி வந்துவிட்டது என்றால் நாங்கள் சென்றபின்புதான் வந்தது. நான், என் கணவர், என் மகன் அனைவரும்சேர்ந்துதான் அவசர ஊர்தியில் சென்றோம். முத்துராமலிங்கம் விபத்து நடந்து 30 நிமிடம் கழித்து வந்திருப்பார் என்றால் அவர் விபத்து நடந்த இடத்தில்தான் இருந்தார். முத்துராமலிங்கம் விபத்து நடந்த இடத்தில் என்ன செய்துகொண்டிருந்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

3. விபத்தில் என் மகன் ஓட்டிய இருசக்கரவாகனம், பேருந்தின் எந்த பகுதியில் மோதியது என்று எனக்கு தெரியாது என்றால் என் மகன் நான் பார்க்கும்போது ரோட்டின்

மேற்குபக்கம் விழுந்துகிடந்தார். இந்த வழக்கு சம்மந்தமாக காவல்நிலையத்தில் யார் புகார் கொடுத்தார்கள் என்றும், அதில் என்ன எழுதியிருந்தது என்றும் எனக்கு தெரியாது என்றால் விபத்து நடந்த மறுநாள் போலீஸார் மருத்துவமனையில் வந்து என் கணவரிடம் புகார் வாங்கினார்கள். புகாரை என் தம்பி கிருஷ்ணன் எழுதினார். புகாரில் என்ன எழுதியிருந்தது என்பதை நான் படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான்.

4. எதிரியின் கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எதிரியானவர் என் மகன் நிலைதடுமாறி வருவதை அறிந்து வாகனத்தை நிறுத்திய பின்பு என் மகனாக எதிரியின் வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. என் மகனுக்கு காலில் எப்படி காயம்ஏற்பட்டது என்பதை எனது கணவரின் புகாரிலோ, எங்களது போலீஸார் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் மகனுக்கு தலையில் ஏற்பட்ட காயம் பேருந்து மோதி ஏற்பட்டது இல்லை என்றாலும், அவரது இருசக்கரவாகனத்திலிருந்து என் மகன் கீழே விழுந்ததால் தரையில் தலை அடிபட்டு ஏற்பட்டது என்றால் சரியல்ல.

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct.

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam.